(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 22.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2010, யூலை 09, வெள்ளிக்கிழமை, மு. ப. 9.00 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0046/ '10

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்தசாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ள மத ஸ்தாபனங்கள் எத்தனை என்பதையும்,

(ii) மாவட்ட அடிப்படையில் பௌத்த கோயில்கள், கிறிஸ்த்தவ ஆலயங்கள், ஹிந்துக் கோயில்கள் மற்றும் முஸ்லிம் பள்ளிவாசல்களின் எண்ணிக்கையை வெவ்வேறாகவும்,

(iii) ஒவ்வோர் மதங்களுக்கும் உரித்தான, பதிவு செய்யப்பட்ட குருமார்களின் எண்ணிக்கையினையும்,

(iv) மேலே (i), (ii), (iii) இன் அடிப்படையில் ஸ்தாபனங்கள் மற்றும் ஆட்களின் பெயர் மற்றும் முகவரிகளையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேலே கூறப்பட்ட ஸ்தாபனங்களுக்கு கடந்த 05 வருடங்களுக்குமாக, வருடாந்த அடிப்படையில் வழங்கப்பட்ட பணத்தின் தொகையினை அவர் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0053/ '10

2.

கௌரவ ராஜீவ விஜேசிங்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் பாராளுமன்ற சட்டம் மூலம் கூட்டிணைக்கப்பட்டு சமூக சேவைகளில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் ஆகியவற்றுக்கு கிடைக்கின்ற வெளிநாட்டு நிதிகளை கண்காணிப்பதற்கு தற்பொதுள்ள பொறிமுறைகள் என்ன என்பதையும்,

(ii) கம்பனிகள் பதிவாளரிடம் பதிவு செய்து சமூக சேவைகள் அல்லது ஆய்வுப் பணிகள் அல்லது பரிந்துரைகளில் ஈடுபட்டுள்ள கம்பனிகளுக்கு கிடைக்கின்ற வெளிநாட்டு நிதிகளை கண்காணிப்பதற்கு தற்போதுள்ள பொறிமுறைகள் என்ன என்பதையும்,

(iii) அவ்விதமான கம்பனிகள் தேவைப்படுத்தப்பட்டவாறு தமது அறிக்கைகளை சமர்ப்பிக்கின்றனவா, வரி தொடர்பான கோவைகளைப் பேணுகின்றனவா, அவற்றிற்கு கிடைக்கின்ற வருமானம் தொடர்பில் செலுத்த வேண்டியுள்ள வரிகளை செலுத்துகின்றனவா என்பதையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) (i) 1999 முதல் 2010 வரையிலான காலப்பகுதியில் இனக் கற்கைகளுக்கான சர்வதேச நிலையத்திற்கு வெளிநாட்டு மூலங்களிலிருந்து கிடைக்கப்பெற்ற நிதி எவ்வளவு என்பதையும், இந்நிதிகள் என்ன நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டன என்பதையும்,

(ii) அந்நிதிகளைப் பெற்றுக் கொண்ட நோக்கத்திற்கு வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் ஒப்புதல் அளித்ததா என்பதையும், மற்றும்

(iii) இந்நிதி பயன்படுத்தப்படும் முறை தொடர்பாக ஏதாவது அரசாங்க முகவரினால் கண்காணிக்கப்பட்டதா என்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0079/ '10

3.

கௌரவ சஜித் பிரேமதாச,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இற்றைக்கு ஒரு வருடத்திற்கு முன்னர் கொங்ரீட் இட்டு செப்பனிடப்பட்ட அம்பாந்தோட்டை மாவட்டத்தின் பெலிஅத்த பிரதேச செயலாளர் பிரிவின் வக்கமுல்ல கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குட்பட்ட வக்கமுல்ல, அலுத்வெவ வீதியின் 100 மீற்றர் வரையிலான தூரம் தற்போது கொங்கிரீட் உடைந்து குன்றும் குழியுமாக முழுமையாக சேதமடைந்த நிலையிலிருப்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீதியை அபிவிருத்தி செய்வதற்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதி எவ்வளவு என்பதையும்,

(ii) நிர்மாணப்பணிகளுக்காக நிதி விடுவிக்கும் போது உரிய நியமங்களுக்கமைய பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளமைக்கான விதப்புரைகள் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களிடமிருந்துபெறப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) மேற்படி வீதியை நிர்மாணிப்பதற்கான பணக் கொடுப்பனவுகளின் போது வேறு எந்த நிறுவனங்களிடமிருந்து விதப்புரைகள் பெறப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேற்படி வீதி நிர்மாணிப்பு தொடர்பாக முறையான விசாரணையொன்றை நடத்துவதற்கும் அவ்வீதியை சீரான நிலைக்கு கொண்டுவருவதற்கும் அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0103/ '10

4.

கௌரவ அஜித் குமார,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அம்பலாங்கொட நகர சபையின் நகர உறுப்பினர் திரு. சந்திரதாச நயிதுவாவடு, இந்துனில் எதிரிவிக்ரம சூரிய உட்பட குண்டர் குழுவொன்றினால் மரண அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து E1B 52/37 ஆம் இலக்கத்தின் கீழ் அம்பலாங்கொட பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றைச் செய்துள்ளார் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி முறைப்பாடு அம்பலாங்கொட பொலிசாரினால் விசாரணை செய்யப்பட்டதா என்பதையும்,

(ii) அவ்வாறாயின், அது சம்பந்தமாக எடுத்த நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) 2010, சனவரி 25 ஆம் திகதி அதிகாலையில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் காரணமாக 2010.02.02 ஆம் திகதி உயிரிழந்த நகர சபை உறுப்பினர் திரு. நயிதுவாவடு, தம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பாக இவர் உயிரிழப்பதற்கு முன்னர் E1B 106/86 ஆம் இலக்கத்தின் கீழ் அம்பலாங்கொட பொலிசுக்கு முறைப்பாடொன்றைச் செய்துள்ளாரென்பதை அவர் அறிவாரா?

(ஈ) (i) அது தொடர்பாக அம்பலாங்கொட பொலிசார் மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்,

(ii) மேற்படி முறைப்பாட்டின் பிரகாரம் இவரைத் தாக்கிய நபர்களின் பெயர்கள் யாவையென்பதையும்,

(iii) இதுவரை தாக்கிய நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளார்களா என்பதையும்,

(iv) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்,

(v) இத்தாக்குதல் மற்றும் படுகொலை தொடர்பில் சட்டத்தை நிலைநாட்ட அவர் எடுக்கும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், என்?

0267/ ‘10

5.

கௌரவ (செல்வி) கமலா ரணதுங்க,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 20 வருடங்களாக நிர்மாணப்பணிகள் தாமதமடைந்திருந்த, தேசிய எரிசக்தி நெருக்கடிக்கு தீர்வாயுள்ள, நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தின் நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்,

(ii) அதன் மூலம் உற்பத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் மெகாவோட் அளவு எவ்வளவென்பதையும்,

(iii) இந்நிர்மாணப்பணிக்காக செலவு செய்யப்படும் நிதி எவ்வளவென்பதையும்,

(iv) இம்மின் உற்பத்தி நிலையத்தின் நிர்மாணப்பணிகள் தாமதிக்கப் பட்டமையால் நாட்டுக்கு ஏற்பட்ட நட்டம் எவ்வளவென்பதையும்,

(v) அப்பணிகளைத் தாமதமின்றிச் செய்தவர்களுக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், என்?

0296/ ‘10

6.

கௌரவ சுனில் ஹந்துனெத்தி,— நீர்வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) லுனாவ கடனீரேரி கருத்திட்டத்துடன் தொடர்புடைய வீதி அபிவிருத்திக்கென மொறட்டுவ மாநகர சபையிடம் ஒப்படைத்துள்ள கருத்திட்டங்களின் பெறுமதி எவ்வளவு என்பதையும்,

(ii) வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள கருத்திட்டங்களின் பெறுமதி எவ்வளவு என்பதையும்,

(iii) பூர்த்தி செய்யப்படாத வீதிக் கருத்திட்டங்கள் யாவை என்பதையும்,

(iv) பூர்த்தி செய்துள்ள கருத்திட்டங்கள் முறையான நியமங்களுக்கமைய மேற் கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(ஆ) வேலைகள் பூர்த்தி செய்யப்படாத கருத்திட்டங்கள் தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், என்?

0305/ ‘10

7.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் நிறைவேற்றதிகார சனாதிபதி பதவியை ஆளொருவர் எத்தனை தவணைகள் வகிக்கலாம் என்பதையும்,

(ii) அத்தவணைகளை அதிகரிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க எண்ணியுள்ளதா என்பதையும்,

(iii) ஆமெனின், எத்தனை தவணைகள் வரைக்கும் என்பதையும்,

(iv) அவ்வாறு தவணைகளை அதிகரிப்பதில்லையெனின் நிறைவேற்றதிகார சனாதிபதி பதவியை இரத்துச் செய்வதற்கு அரசாங்கம் கருதுகின்றதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், என்?

0345/ ’10

8.

கௌரவ மொஹமட் அஸ்லம்,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) களுத்துறை மாவட்டத்தின், பேருவளை பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தில் அமைந்துள்ள குடிசை வீடுகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) அந்த ஒவ்வொரு வீட்டினதும் உரிமையாளரின்/வதியும் குடும்பத் தலைவரின் பெயர், முகவரி யாதென்பதையும்,

(iii) மேற்படி வீடுகளில் வதியும் உப குடும்பங்களின் தலைவர்களது பெயர், முகவரி யாதென்பதையும், ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— 2010, யூலை 03 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினால் தடைபெறாமல், ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 1 தொடக்கம் 20 வரையுள்ள பிரேரணைகள் மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் 7 ஆம், 70(2) ஆம் மற்றும் 70 (3) ஆம் இலக்க நிலையியற் கட்டளைகளின் ஏற்பாடுகளினின்றும் விலக்குப்பெறுமாக.

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல.1),— 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2010.05.04 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் இது முதற்கொண்டு செவ்வாய்க்கிழமை, புதன்கிழமை, வியாழக்கிழமை, வெள்ளிக்கிழமை ஆகிய தினங்களில் சபை அமர்வு நேரம் பி. ப. 1.00 மணி முதல் பி. ப. 7.30 மணி வரை இருக்குமாக. செவ்வாய்க்கிழமை, புதன்கிழமை, வியாழக்கிழமை, வெள்ளிக்கிழமை ஆகிய தினங்களில் பி. ப. 6.30 மணிக்கு 7(5) ஆம் இலக்க நிலையியற் கட்டளை தொழிற்படுமாக. செவ்வாய்க்கிழமை, புதன்கிழமை, வியாழக்கிழமை, வெள்ளிக்கிழமை ஆகிய தினங்களில் பி.ப. 7.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

3.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல.2),— இப்பாராளுமன்றம் இன்று அதன் அமர்வு கலையும் போது 2010, யூலை மாதம் 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப. 1.00 மணிவரை ஒத்திவைக்கப்படுமாக.

4.

கௌரவ அ. விநாயகமூர்த்தி,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல.1),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக,—

"இராமகிருஷ்ண சாரதா மிஷன் (இலங்கைக் கிளை) யைக்

கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

5.

கௌரவ ஹேமால் குணசேக்கர,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல.2),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக,—

"இலங்கை பிரயோக புள்ளிவிபரவியல் நிறுவகத்தைக்

கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*அ1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2010) — (ஒதுக்கப்பட்ட ஒன்பதாம் நாள்) — குழு ஆய்நிலை (பரிசீலனை, யூலை 08).

*2

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1),— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழான உற்பத்தி வரி தொடர்பில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2010, யூன் 23 ஆம் திகதிய 1659/17 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2010.07.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*3

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல.2),— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 இ ஆம் பிரிவின் கீழான உற்பத்தி வரி தொடர்பில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2010, யூன் 02 ஆம் திகதிய 1656/25 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2010.07.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*4

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல.3),—1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழான உற்பத்தி வரி தொடர்பில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2010, மே 31 ஆம் திகதிய 1656/3 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2010.07.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*5

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1),—அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியுடன் சேர்த்த வாசிக்கப்படும் (அத்தியாயம் 52) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 22 (1) ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு 2010 மே 31 ஆம் திகதிய 1656/02 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2010.07.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(915 ஆம் இலக்க, மதுவரி அறிவித்தல்)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*6

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.2),— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52ஆம் அத்தியாயமான) 22ஆம் பிரிவின் 1ஆம் உப பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சரால், 2009, மார்ச்சு மாதம் 26 ஆம் திகதிய 1594/24 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் 907, 908, 909 ஆம் இலக்க, மது வரி அறிவித்தல்களில் மற்றும் 2008, ஒற்றோபர் மாதம் 07ஆம் திகதிய 1570/8 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் 906 ஆம் இலக்க, மதுவரி அறிவித்தலில் உள்ள கட்டளைகளை நீக்கி 2010, யூன் மாதம் 23 ஆம் திகதிய 1659/18 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.07.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(916, 917, 918, 919 ஆம் இலக்க, மதுவரி அறிவித்தல்கள்)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*7

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை,—1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம் 14 ஆம் பிரிவின் கீழ் செஸ் வரி தொடர்பில் கைத்தொழில், வாணிப அமைச்சரால் ஆக்கப்பட்டு 2010, மே 31 ஆம் திகதிய 1656/4 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2010.07.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*8

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2010.07.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட(235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10 அ பிரிவின் கீழான இறக்குமதித் தீர்வைகள் சம்பந்தமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(2010 மே 31 ஆம் திகதிய 1656/8 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*9

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— சுங்க (திருத்த) சட்டத்தின் கீழ் அறிவித்தல்,— 2010.07.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2003 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, சுங்கங்கள் (திருத்தச்) சட்டத்தின் அட்டவணை உ வின் 10(அ) ஆம் உறுப்புரையின் கீழான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(2010 யூன் 1 ஆம் திகதிய 1656/23 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானி)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*10

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தினால் கீழ் கட்டளை,— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுத் தொடர்பில் சனாதிபதியால் ஆக்கப்பட்ட 2010, மே 07 ஆம் திகதிய 1652/59 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2010.07.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*11.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— அரசிறைப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கட்டளை,— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, அரசிறைப் பாதுகாப்புச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியால் ஆக்கப்பட்டு 2010, மே மாதம் 31 ஆம் திகதிய 1656/9 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரிசுரிக்கப்பட்டதும் 2010.07.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*12.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— கொடுப்பனவு மற்றும் கொடுத்துத் தீர்த்தல் முறைமைச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள்,— அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தி மற்றும் 2005 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, கொடுப்பனவு மற்றும் கொடுத்துத் தீர்த்தல் முறைமைச் சட்டத்தின் 11 ஆம், 17 ஆம் மற்றும் 20 (2) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 43 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு 2009, யூலை மாதம் 31 ஆந் திகதிய 1612/32 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.07.03 அம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*13.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.1),— 2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால், தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி, திட்டமிடல் அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல.06 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 06

2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக்கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 28502 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "விவசாயப்பண்ணை முற்பணக் கணக்கு — விவசாயத் திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — ரூபா 321,000,000 இலிருந்து ரூபா 260,000,000 வரை.

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை — ரூபா 321,000,000 இலிருந்து ரூபா 210,000,000 வரை.

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக் கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(இக்கட்டளை 2009.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் :* மஹிந்த ராஜபக்ஷ,
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

கொழும்பு 01,
2010.01.01

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*14.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.2),— 2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால், தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி, திட்டமிடல் அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல.07 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 07

2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 30602 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "பண்டசாலை முற்பணக் கணக்கு — இலங்கை புகையிரதத் திணைக்களங்கள்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — ரூபா 1,200,000,000 இலிருந்து ரூபா 1,800,000,000 வரை.

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை — ரூபா 1,200,000,000 இலிருந்து ரூபா 700,000,000 வரை.

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — ரூபா 500,000,000 இலிருந்து ரூபா 850,000,000 வரை.

(இக்கட்டளை 2009.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் :* மஹிந்த ராஜபக்ஷ,
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

கொழும்பு 01,
2010.01.01

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*15.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.3),— 2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால், தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி, திட்டமிடல் அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல.20 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமெனப் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 20

2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 25002 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "பிற அரசாங்கத்தின் சார்பில் கொடுப்பணவுக்கான முற்பணக்கணக்கு — அரச கணக்குகள் திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை — ரூபா 5,300,000 இலிருந்து ரூபா 4,300,000 வரை.

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(இக்கட்டளை 2009.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் :* மஹிந்த ராஜபக்ஷ,
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

கொழும்பு 01,
2010.04.22

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*16.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.4),— 2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால், தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி, திட்டமிடல் அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல.21 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமெனப் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 21

2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 25003 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "பல்லின முற்பணக்கணக்கு — அரச கணக்குகள் திணைக்களங்கள்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — ரூபா 200,000,000 இலிருந்து ரூபா 20,000,000 வரை.

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை — ரூபா 560,000,000 இலிருந்து ரூபா 44, 700,000 வரை.

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை — ரூபா 400,000,000 இலிருந்து ரூபா 588,000,000 வரை.

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(இக்கட்டளை 2009.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் :* மஹிந்த ராஜபக்ஷ,
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

கொழும்பு 01,
2010.04.22

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*17.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.5),— 2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவினால், தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி, திட்டமிடல் அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல.23 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமெனப் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 23

2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத் தின் மூன்றாம் அட்டவணையின் 01602 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "வழங்குவதற்கும் பயன்படுத்துவதற்கும் பணம் முற்பணமாக வழங்குதல் முற்பணக் கணக்கு — இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை — ரூபா 6,000,000 இலிருந்து ரூபா 10,700,000 வரை.

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(இக்கட்டளை 2009.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் :* மஹிந்த ராஜபக்ஷ,
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

கொழும்பு 01,
2010.04.22

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*18.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.6),— 2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால், தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி, திட்டமிடல் அமைச்சரால் மேற்கொள்ளப்பட்ட கீழ்க்காணும் பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட கட்டளைகள் இத்தால் அங்கீகரிக்கப்பட வேண்டுமெனப் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(இக்கட்டளைகள் 2009.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்)

## அட்டவணை

### 2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டம்

நிதி ஆண்டு 2009 தொடர்பில் 2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சினால் அதிகாரமளிக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கான முற்பணங்கள் சம்பந்தமான முற்பணக் கணக்குகளின் எல்லைகளின் மாற்றங்களின் அட்டவணை

| தொ. இல. | அமைச்சு / திணைக்களம் | விடய இல. | II அரசாங்கத்தின் செயற்பாடுகளின் செலவினத்தின் உச்ச எல்லைகள் | | III அரசாங்கத்தின் செயற்பாடுகளின் பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லைகள் | | IV அரசாங்கத்தின் செயற்பாடுகளின் பற்று மீதிகளின் உச்ச எல்லைகள் | | கட்டளை இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ரூபா இருந்து | ரூபா வரை | ரூபா இருந்து | ரூபா வரை | ரூபா இருந்து | ரூபா வரை | |
| 1. | வீடமைப்பு பொது வசதிகள் அமைச்சர் | 12501 | - | - | - | - | 20,000,000 | 30,000,000 | 1 |
| 2. | கடற்றொழில் நீர் வளங்கள் திணைக்களம் | 29001 | - | - | - | - | 90,000,000 | 97,000,000 | 2 |
| 3. | நீதி, சட்ட மறுசீரமைப்பு அமைச்சு | 11001 | - | - | - | - | 50,000,000 | 55,000,000 | 3 |
| 4. | ஏற்றுமதி அபிவிருத்தி சர்வதேச வர்த்தக அமைச்சர் | 16701 | - | - | - | - | 9,000,000 | 13,000,000 | 4 |
| 5. | தொழில் நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களம் | 21501 | - | - | - | - | 130,000,000 | 247,000,000 | 5 |
| 6. | மீள் குடியமர்த்துகை, அநர்த்த நிவாரண சேவைகள் அமைச்சர் | 14501 | - | - | - | - | 15,000,000 | 21,000,000 | 8 |
| 7. | வர்த்தகம், வாணிபம் நுகர்வோர் அலுவல்கள் மற்றும் சந்தைப்படுத்தல் அபிவிருத்தி அமைச்சர் | 11601 | - | - | - | - | 21,000,000 | 25,000,000 | 9 |
| 8. | அரசாங்க அச்சாளர் திணைக்களம் | 21101 | - | - | - | - | 175,000,000 | 245,000,000 | 10 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 9. | மாவட்டச் செயலகம், மொனராகல | 27701 | - | - | 23,500,000 | 18,000,000 | - | - | 11 |
| 10. | மாவட்டச் செயலகம், கண்டி | 25801 | - | - | - | - | 155,000,000 | 172,000,000 | 12 |
| 11. | மாவட்டச் செயலகம், மாத்தறை | 26201 | - | - | - | - | 165,000,000 | 169,000,000 | 13 |
| 12. | மாவட்டச் செயலகம், புத்தளம் | 27301 | - | - | - | - | 120,000,000 | 142,000,000 | 14 |
| 13. | மாவட்டச் செயலகம், அம்பாறை | 27001 | - | - | 29,500,000 | 27,000,000 | 72,000,000 | 170,000,000 | 15 |
| 14. | மாவட்டச் செயலகம், கச்சேரி, கிளிநொச்சி | 26801 | - | - | - | - | 26,000,000 | 29,000,000 | 16 |
| 15. | மாவட்டச் செயலகம், இரத்தினபுரி | 27801 | - | - | 35,400,000 | 26,000,000 | 115,000,000 | 132,000,000 | 17 |
| 16. | மாவட்டச் செயலகம், பொலன்னறுவ | 27501 | - | - | - | - | 73,000,000 | 74,000,000 | 18 |
| 17. | பெற்றோலியம், பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் | 11501 | - | - | - | - | 6,500,000 | 8,200,000 | 19 |
| 18. | இலங்கை கடற்படை | 22301 | - | - | - | - | 600,000,000 | 677,000,000 | 22 |
| 19. | மலையக சிறு பயிர்ச் செய்கை புனரமைப்புத் திணைக்களம் | 30501 | - | - | - | - | 5,000,000 | 6,000,000 | 24 |
| 20. | சட்ட அலுவல்கள் திணைக்களம் | 32301 | - | - | - | - | 1,185,000 | 1,300,000 | 25 |
| 21. | முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களம் | 32401 | - | - | - | - | 1,900,000 | 8,500,000 | 26 |

2009 ஏப்ரல் 06 ஆம் திகதி
கொழும்பு - 01.

ஒப்பம் : மஹிந்த ராஜபக்ஷ
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*19.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள், — 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணிகள் மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*20.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம்,— நிருவாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளரின் (ஒம்புட்சுமன்) சம்பளம், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 156 (3) உறுப்புரையின் வண்ணம் 2009.01.01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு நடைமுறைக்கு வருமாறு அமைய வேண்டுமென இப் பாராளுமன்றத்தினால் இத்தால் குறித்துரைக்கப்படுகின்றது.

நிருவாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் (ஒம்புட்சுமன்) - ரூ. 65,000 /=

மேலும், இந்த மாதாந்த சம்பளத்துள் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள வீட்டு வாடகைப் படியும் உள்ளடக்கப்பட்டுள்ளதாதலால், நிருவாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளருக்கு (ஓம்புட்சுமன்) வீட்டு வாடகைப் படியும் அடங்கலாக ரூ. 65,0000/= மாதாந்த சம்பளத்திற்குப் புறம்பாக, 2009.01.01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிற படிககைப் பெறுவதற்கு உரிமை இல்லையெனவும் இந்தப் பாராளுமன்றத்தினால் மேலும் தீர்மானிக்கப்படுகிறது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

## தினைப்பணிகள் மீதான திருத்தங்கள் பற்றிய முன்னறிவித்தல்

அ1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2010) என்னும் சட்டமூலத்திற்குக் குழு ஆய்நிலையில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் திருத்தங்களளைத் "தினப்பணிக்கான அனுபந்தம்" என்னும் தனியிதழிற் காண்க.